ஓ

சிவமயம்.

கபிலாகவல்.

—(o)—

T. சாரதா புத்தகசாலை அதிபர்
T. S. துரைசாமி முதலியாரால்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

மூஸ்ரி அச்சுக்கூடம், சென்னை.

5

சகல நாடகக் கம்பெனியாராலும்

நடத்திவருகின்ற

லவ-குச சரித்திரம் டிராமா.

இது தற்காலத்தில் டிராமா கம்பெனியார்களால் நடத்திவருகின்ற சரிதநிரம், இதில் ஸ்ரீராமர் தனது மனைவியைப் பிரிந்து அஸ்வமேதயாகம் புரிவதிலிருந்து குசலவர் அஸ்வத்தைப் பிடித்துக்கட்டி அதன்பின் எதிர்த்து வந்தவரை ஜெயித்துக் கீர்த்திபெற்று விளங்கிமகுடாபிஷேகம் நடத்தியவரையிலும் சரித்திரம் கோர்வையை தவராமல் எழுதி அச்சிட்டு விற்பனை செய்கிறோம்.

இதன் விலை அணா—4

T. சாரதா புத்தகசாலை,

மின்ட் போண்டு, மதராஸ்.

சிவமயம்.

கபிலர் வரலாறு.

மதுரையிற் கடைச்சங்கமிருந்த காலத்திலே சோழியப்பிராமணனுகிய தெய்வத்தன்மை பொருந்திய பகவான் என்பவராலே மனைவியாக ஏற்றுக்கொள்ளப்படுதற்பொருட்டுப் புலைக்குலத்தவளாகிய கருவூர் ஆதினள் பவள் அவருக்குச் செய்த உடன்படிக்கை வழுவாதிருக்கும்படி யவருக்குத் தானீன்ற பெண்பால் நால்வர் ஆண்பான்மூவர் எனப்படுகின்ற ஔவை, உப்பை, அதிகமான், உருவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர், ஆகிய ஏழுபிள்ளைகளையும் அதனுபிறந்த இடங்களிலே வைத்துவிட்டுச் சென்றுள். அவ்வெழுவரிலே சோழநாட்டிலே திருவாரூரென்னும் பரிசுத்த சிவஸ்தலத்திலே சென்றுவைக்கப்பட்ட பிள்ளையானது அழகும், உருவும் அமைந்து விளங்கா நிற்கக்கண்ட அவ்வூர் வேதியருள் சந்ததியின்றி வருந்தியிருந்த ஒருவர் அதனைத்தனியிட்டுப் பொற்குடத்தைக் கண்டவறிபவன்போற் கண்களிகூர்ந்து எடுத்துக்கொண்டுபோய் தன்மனைவி கையிலே கொடுத்துக் கபிலர் கபிலர் என்று பெயரிட்டு வளர்

த்தார். அந்தபிள்ளை தாய் தந்தைகளாலே பலமுயற்சி களுஞ்செய்து வளர்க்கப்பட்டு அறிவொழுக்கங்களிலே சிறந்து உபநயத்துக்குந் தக்க பருவத்தை அடைந்தது. அபபொழுது தந்தையார் மைந்தனுக்கு அச்சடங்கு செய்வித்ததற்கு அங்ஙகருள் வாழும் அந்தணரை அழைத்தார். அதற்கு அவர்கள்கூடி இப்பிள்ளை நம்மரபிலே பிறந்ததல்லாமையால் அப்பிள்ளையையும் ஒப்புக்கொள்ளோம் அதற்கு ரீர் உபநயனமுஞ் செய்தல்கூடாதென மறுத்துக் கூறினர்கள். அதுகேட்டுத் தந்தையார் மனங்கலங்கி நிற்பதுண்டு கபிலர் கடவுளது திருவருள் பெற்று அம்மன்றையவர் கூட்டத்துட்சென்று இந்த அகவல்பாடிக் கன்மனத்தாலன்றிச் சன்மத்தாலே சாதி என்றுதொன்றில்லையெனச் சித்தாந்தஞ் செய்தருளினர். பின்னர் இதனை அனுசரித்தே அக்கபிலருக்கு உபநயனச்சடங்குகள் நிறைவேறியது.

கபிலர் வரலாறு,

முற்றிற்று.

கணபதி துணை.

கபிலரகவல்.

காண்முகன்படைத்த நாலுவகையுலகில்
ஆன்றசிறப்பி னரும்பொருள் கூறுங்கால்
ஆண்முதிதோ டெண்முதிதோ வன்றியலிமுதிதோ
காண்முதிதோ கோண்முதிதோ
கல்வினைமுதிதோ தீவினைமுதிதோ
செல்வஞ்சிறப்போ வறிவுசிறப்போ
தொல்லைமாஞாலந் தோற்றமோபடைப்போ
எல்லாப்பிறப்பு மியற்கையோ செயற்கையோ
காலத்தற்சாவுமோ பொய்ச்சாவுசாவுமோ
நஞ்சுறுதிவினை துஞ்சுமோ துஞ்சாதோ
துஞ்சும்போதந்தப் பஞ்சேந்திரியம்
என்செயாநிற்குமோ வெவ்விடத்தேகுமோ
ஆற்றலுடையீ ரருந்தவப்புரிந்தீர்
வேற்றுடப்பாகுமோ தமதுடம்பாகுமோ
உண்டியையுண்குவ துடலோவுயிரோ
உலகத்தீரோ யுலகத்தீரே. 1/

காக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து
சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின்
மனிதர்குவ்பது நூறல்லதில்லை
ஐம்பதிராவி லகலுந்தயிலிளுன்
ஓட்டியவிளமையா லோரைந்துநீங்கும்
ஆக்கையினமையி லைமூன்றுநீங்கும்
எழுபதுபோகநீக் கிருப்பனமூப்பதே.

(அவற்றுள்)

இன்புறுகாலுஞ் சிலவேயதா அன்று
துன்புறுகாளுஞ் சிலவேயாதலால்
பெருங்காலெற்றது செலவம்பெருக்காறு
றிடிகரையொத்த திளமையிடிகரை
வழ்மாமொத்தது வாழ்நாளாதலால்
நன்றேசெய்யவும் வேண்டுமொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டுங்ன்றும்
இன்றேசெய்யவும் வேண்டுமின்று
இன்னேசெய்யவும் வேண்டுமின்னும்
நாளை நாளை என்பீராகில்
நமனுடையமுறைநா ளாவதுமறியீர்
நம்முடைமுறைநா ளாவதுமறியீர்

எப்போதாயினுங் கூற்றுவன்வருவான்
அப்போதந்தக் கூற்றுவன்றன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும்போகான்
சாற்றவும்போகான் றமரொடும்போகான்
கல்லாரென்னு னல்குரவறியான்
தியாரென்னுன் செல்வரென்றன்னுன்
தரியாரெனருகணந் தருகளுளன்
உயிர்கொடுபோவா னுடல்கொடுபோகான்
எதுக்கழுவீ ரேழைமாந்தர்காள்
உயிரினையிழந்தோ வுடலினையிழந்தோ
உயிரிழந்தழுதலென் றேதுவீர்கில்
உடலினையறைலா தின்றுங்காண்கிலீர்
உயிரினையிழந்த உடலதுதன்னைக்
களவுகொண்ட கள்வனைப்போலக்
காலுமார்த்துங் கையுமார்த்துக்
கூளைகளந்து கோவணங்கொளுவி
சமத்தீயை எரியெழமூட்டிப்
பொடிபட்சுட்டுப் புனலிடைமூழ்கிப்
போய்த்தமரோடும் புந்திநைந்தழுவது
சலமெனப்படுமோ சதுரெனப்படுமோ
பார்ப்பனமாந்தர்கள் யகர்வதுகேண்மின்

இறந்தவாயுமை யிவ்விடையிருத்திப்
பாவனைமந்திரம் பலபடவுரைத்தே
உமக்கவர்புத்திர ரூட்டினபோது
அடுபசியர்ற்குலந் தாங்கவர்மீண்டு
கையேந்திநிற்பது கண்டதார்புகலீர்
அருந்திய வுண்டியாலார்பசிகழிந்தது
ஓட்டியர்மிலேச்ச ரூணர்சிங்களர்
இட்டிடைச்சோனகர் யவனர்சீனத்தர்
பற்பலர்நாட்டினும பார்ப்பாரிலையால்
மூற்படைப்பதனில்வே ருகியமுறைணமபோல்
கால்வகைச்சாதியிற் காட்டினர்காட்டினீர்
மேல்வகைகீழ்வகை விளங்குவதாழுக்கால்
பெற்றமுமெருமையும் பிறப்பினில்வேறே
அவ்விருசாதியி லாண்பெண்மாறிக்
கலந்துகருப்பெறல் கண்டதுண்டோ
ஒருவகைசாதியா மக்கட்பிறப்பிலி
ருவரையாகநீ ரியம்பியகுலத்தில்
ஆண்பெண்மாறி அணைதலுமணைந்தபின்
கருப்பொறையுயிர்ப்பதுங் காண்கின்றிலீரோ
எங்கிலத்தெந்தவித் திப்படின்றதோ
அங்கிலத்தந்தவித் தங்குறித்திடுமலால்

மாறிவேறுகும் வழக்கமொன்றிலேயே
பூசுரர்ப்புணர்ந்து புலைச்சியாரீன்ற
புத்திராயினோ பூசுரால்லரோ
பெற்றமுமெருதும் பேதமாய்த்தோன்றல்போல்
மாந்தரிற்பேதமாம் வடிவெவர்கண்டோர்
வாழ்நாளுருப்புமெப் வண்ணமோடறிவினில்
வேற்றுமையாவது வெளிப்படலின்றே
தென்றிசைப்புலையன் வடதிசைக்கேகிற்
பழுதறவோதிய பார்ப்பானுவான்
வடதிசைப்பார்ப்பான் றென்றிசைக்கேக
நடையதுகோணிப் புலையனுவான்

(அதனிற்க)

சேற்றிற்பிறந்த செங்கழுநீர்போலப்
பிரமற்குக்கூத்திவயிற்றிற் பிறந்தவசிட்டரும்
வசிட்டர்க்கச்சண்டாளி வயிற்றிற்பிறந்தசத்தியரும்
சத்தியர்க்குபுலைச்சிதாள் சோர்ந்துபிறந்தபாசாரும்
பாசாருக்குமீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்தவியாசரும்

(இந்நால்வரும்)

வேதங்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றே

அருந்தவமாமுனி யாமபகவற்குக்
கருவூர்ப்பெரும்பதிக் கட்பெரும்பூலைச்சி
ஆதிவயிற்றினி லன்றவதரித்த
காண்முளையாகிய கபிலனும்யானே
என்னுடன்பிறந்தவ ரெத்தனைபேரெனில்
ஆண்பான்மூவர் பெண்பாலுல்வர்
யாம்வளர்தாஞ்சிறி தியம்புகல்கேண்மின்
ஊற்றுக்காடெனு மூர்தனிற்றங்கியே
வண்ணாகத்தில் டப்பைவளர்ந்தனன்
காவிரிப்பூம்பட்டணத்தில் கள்விலஞர்சேரியில்
சான்றாகந்தனில் உறுவைவளர்ந்தனள்
காம்புக்கருவியோர் கண்ணீடுஞ்சேரியில்
பாணாகத்தி லெளவைவளர்ந்தனள்
குறவர்கோமான் கொய்தினைப்புனஞ்சூழ்
வண்மலைச்சாரலில் வள்ளிவளர்ந்தனர்
தொண்டைமண்டலத்தில் வண்டமிழ்மயிலைப்
பூரையரிடத்தில் வள்ளுவர்வளர்ந்தனர்
அரும்பார்சோலைக் கரும்பார்வஞ்சி
அதிகனிலலிடை பதிமானவளர்ந்தனன்
பாரூர்நீர்நாட் டாரூர்தன்னில்
அந்தணர்வளர்க்க யானும்வளர்ந்தேன்

(ஆதலால்)

மாரிதான்சிலரை வரைந்துபெய்யுமோ
காற்றுஞ்சிலரை நீக்கிவீசுமோ
மானிலஞ்சுமக்க மாட்டேனென்னுமோ
கதிரோன்சிலரைக் காயேனென்னுமோ
வாழ்நான்குஜாதிக் குணவுகாட்டிலும்
கீழ்நான்குஜாதிக் குணவுகாட்டிலுமோ
திருவும்வருமையுஞ் செய்தவப்பேறும்
சாவதும்வேறி தாணிலோர்க்கே
குலமுமொன்றே குடியுமொன்றே
இறப்புமொன்றே பிறப்புமொன்றே
வழிபடுதெய்வமு மொன்றேயாதலால்
மூவனெருசைத்த மொழிதவராமல்
எங்ஙாளாயினு பிழ்ப்பவர்க்கிட்டும்
புலையுங்கொலையுங் களவுந்தவிர்ந்து
நிலைபெறவறத்தி நிற்பணதலறிந்து
ஆணும்பெண்ணு மல்லதையுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது
சிறப்புஞ்சிலமு மல்லதுபிறப்பு
நலந்தருமோ பேதையீரோ.

கபிலர் கவல்

முற்றிற்று.